सत्यमेव जयते

# கைத்தறி வளர்ச்சி ஆணையர் அலுவலகம்

ஜவுளி அமைச்சகம், இந்திய அரசு, புது டெல்லி

## கைத்தறி முத்திரை

உள்ளூர் சந்தைக்கு

Handloom

ஏற்றுமதிக்கு

hand woven
in INDIA

கைத்தறிக்கு உத்திரவாதம்

## அமுல்படுத்தும் அலுவலகம்


**டெக்ஸ்டைல்ஸ் கமிட்டி**

ஜவுளி அமைச்சகம், இந்திய அரசு,
பி. பாலு ரோடு, பிரபாதேவி, மும்பை - 400 025.
போன் : 022 66527510 , 66527521
Email : sec@giasbm01.vsnl.net.in or tciso@vsnl.com
Website : www.textilescommittee.nic.in

# கைத்தறி முத்திரை திட்டம்

நமது கைத்தறி ஜவுளிகள் தொன்றுதொட்டு இந்தியாவின் பாரம்பரியமிக்க கலாசாரத்தின் ஒரு முக்கிய அங்கமாக இருந்து வருகிறது. விவசாயத்திற்கு அடுத்தபடியாக பொருளாதார ரீதியாக, கைத்தறித்தொழில் மக்களுக்கு வாழ்வளிக்கும் தொழிலாக விளங்கி வருகிறது. கைத்தறித்தொழில் 65 இலட்சம் தொழிளாளர்களுக்கு நேர்முகமாகவும், மறைமுகமாகவும் வேலை வாய்ப்புக்களை தருவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தியா முழுவதும் ஏறக்குறைய 35 இலட்சம் கைத்தறிகள் உள்ளன. 2005 – 2006-ம் ஆண்டிற்கான கைத்தறி ஜவுளி உற்பத்தி 61880 இலட்சம் சதுர மீட்டர் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இது 2005-2006ம் ஆண்டிற்கான நம் நாட்டின் மொத்த ஜவுளி உற்பத்தியில் 16 விழுக்காடு என கணக்கிடப்பட்டுள்ளது.

மக்கள் தொகைப் பெருக்கம் மற்றும் வளர்ச்சி காரணமாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வணிகம் அதிகரிக்கும் என்றும், தனி நபர் தேவை கூடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. கைத்தறித்தொழிலானது குறைந்த அளவில் பொருளாதார ரீதியாக லாபகரமாக பொருட்களை உற்பத்தி செய்வதிலும், புதுமையான படைப்புகளை உருவாக்குவதிலும், எளிதாக புதிய டிசைன்களுக்கு மாறுவதிலும், வாடிக்கையாளர்களுடைய தேவைகளின் படி உற்பத்தி செய்வதிலும், தனிப்பட்ட டிசைன்களை உருவாக்குவதிலும், ஆலை மற்றும் விசைத்தறித் தொழில்களைக் காட்டிலும் தனித்தன்மை பெற்று விளங்குகிறது.

கைத்தறித்தொழில் தற்போது அதிக சவால்களை சந்திக்க வேண்டியுள்ளது. கைத்தறி உற்பத்தி பெரும்பாலும் பருத்தி இழைகளையே நம்பியுள்ளது. ஆனால் எதிர்கால தேவை, பருத்தி இழைகளோடு மற்றவகை இழைகளையும் கொண்டதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தொழில் நுட்ப வளர்ச்சி காரணமாக கைத்தறிப் பொருட்கள் மிக குறைந்த விலையில் விசைத்தறியிலும் உற்பத்தி செய்யப்படுகின்றன. அரசாங்கத்தின் கொள்கையானது ஜவுளித்துறையில் அனைத்து பிரிவுகளின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கு ஏதுவான சூழ்நிலையை உருவாக்குவதாக இருப்பினும், கைத்தறித்தொழிலின் தனித்தன்மையையும் பாதுகாக்க விரும்புகிறது.

### கைத்தறி முத்திரை

இந்திய அரசின் கைத்தறி வளர்ச்சி ஆணையர் அலுவலகம் கைத்தறித் தொழிலின் வளர்ச்சிக்கும், நெசவாளர்களின் நல்வாழ்விற்கும் பல்வேறு வளர்ச்சி திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இதில் ஒன்றாக '**கைத்தறி முத்திரை திட்டம்**' தொடங்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் மூலம் கைத்தறி பொருட்களுக்கு ஒட்டு மொத்த தனித்தன்மை கிடைக்கும். கைத்தறி பொருட்களை தெளிவாக அறிய முடியும். வாடிக்கையாளர்களுக்கு உண்மையான கைத்தறி உற்பத்தி என்பதற்கான உத்திரவாதம் கிடைக்கும். ஆகையால், இன்றைய வியாபார போட்டியில் கைத்தறிப் பொருட்களை தெளிவாக அறியவும் வாடிக்கையாளர்களோடு தொடர்பு கொள்ளவும் **"கைத்தறிமுத்திரை"** மிகவும் உதவிகரமாக இருக்கும்.

கைத்தறிமுத்திரை உருவாக்கும் பொறுப்பு அகமதாபாத்தில் உள்ள தேசிய வடிவமைப்புப் பயிலகத்திடம் ஒப்படைக்கப்பட்டது. கைத்தறிமுத்திரையின் வடிவம் பாவு மற்றும் ஊடை நூலின் பிணைப்பைப் போல் உருவாக்கப்பட்டுள்ளது. பாவு, ஊடை இழைகள், நெசவாளர்களுடைய திறமையையும், கூட்டு ஸ்தாபனங்களின் பங்கையும் குறிப்பதாக உள்ளன. பாவும், ஊடையும் இணைக்கப்பட்டு முப்பரிமான கன சதுரவடிவமாக உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த கைத்தறி முத்திரை இரண்டு விதமாக உருவாக்கப்பட்டுள்ளன. அதில் ஒன்று உள்நாட்டு உபயோகத்திற்கானது. இதன் கீழ் **“கைத்தறி”** (Handloom) என்று குறிக்கப்பட்டிருக்கும். மற்றொன்று வெளிநாட்டு வர்த்தகத்திற்கானது. இதன் கீழ் இந்தியாவில் கைத்தறியில் நெய்யப்பட்டது (hand woven IN INDIA) என்று குறிக்கப்பட்டிருக்கும்.

| Handloom | hand woven in INDIA |
|---|---|

## கைத்தறிமுத்திரை திட்டத்திற்கான கொள்கை

(2004 – 09) க்கான வெளிநாட்டு வர்த்தகக் கொள்கையின்படி ஏப்ரல் 7, 2006 அன்று வெளியிடப்பட்ட இணைப்பில் இந்த கைத்தறிமுத்திரைத் திட்டத்திற்கான சலுகை அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, விளையாட்டு பொருட்கள், பட்டாசுகள், எழுதுபொருள்வகைகள், கைவினைப்பொருட்கள், மதிப்புகூட்டப்பட்ட மீன் மற்றும் தோல் பொருட்களோடு **கைத்தறி முத்திரை பெற்ற கைத்தறி ஜவுளிகளுக்கும்** ஏற்றுமதி மதிப்பின் (FOB) **50** சதவீதத்திற்கு, தீர்வைபற்றாக (duty credit) **2.5** சதவீதம் அனுமதிக்கப்படுகிறது.

## கைத்தறி முத்திரை பற்றிய விபரம்

கைத்தறிமுத்திரை, வணிகமுத்திரைச் சட்டம் 1999ன் கீழ் பதிவு செய்யபட்டுள்ளது.

மிக எளிதில் அறிந்து கொள்வதற்கு வசதியாக, ஒவ்வொரு லேபிளின் பின்புறம் அடையாளம் மற்றும் ரகத்திற்கான குயிரீடு எண் குறிக்கப்படடிருக்கும். உதாரணமாக: DFXXXX100001-S என்றால் உள்நாட்டு வியாபாரத்திற்கான துணிவகைகள் என்றும், DMXXXX100001-S என்றால் உள்நாட்டு வியாபாரத்திற்கான மேட்அப்ஸ் மற்றும் ஆடைவகைகள் என்றும், EFXXXX100001-S என்றால் வெளிநாட்டு வியாபாரத்திற்கான துணிவகைகள் என்றும், EMXXXX100001-S என்றால் வெளிநாட்டு வியாபாரத்திற்கான மேட்அப்ஸ் மற்றும் ஆடைவகைகள் என்றும் வகைப்படுத்தி அறிந்துகொள்ள வேண்டும்.

| **உள்நாட்டு துணிவகைகள்** | **உள்நாட்டு மேட்அப்ஸ் மற்றும் ஆடைகள்** | **வெளிநாட்டு துணிவகைகள்** | **வெளிநாட்டு மேட்அப்ஸ் மற்றும் ஆடைகள்** |
|---|---|---|---|
| Handloom | Handloom | hand woven in INDIA | hand woven in INDIA |
| **DFXXXX100001-S** | **DMXXXX100001-S** | **EFXXXX100001-S** | **EMXXXX100001-S** |

**லேபிள் இணைக்கும் முறை**

- ❖ கைத்தறித்துணியில் இருந்து தயாரிக்கப்பட்ட ஒவ்வொரு மேட்அப்ஸ் மற்றும் ஆடைகளிலும் ஒரு கைத்தறி முத்திரையிட்ட லேபிள் இணைக்கப்படவேண்டும். இந்த லேபிளை டேக் கன் (Tag Gun) மூலமாகவோ அல்லது தைப்பதின் மூலமாகவோ இணைக்கப்படலாம்.
- ❖ கைத்தறி துணிகளில், லேபிளை உள்மடிப்பின் ஒரு முனையில் இணைக்கப்படவேண்டும்.
- ❖ கைத்தறி துணிகளை வாடிக்கையாளர்களுக்கு வெட்டி விற்பனைசெய்யும் போது, லேபிளை விற்பனை செய்யும் துணி பிட்டின் மீது இணைத்து தரவேண்டும்.

**நோக்கம்**

- . இத்திட்டம் கைத்தறியிலிருந்து உற்பத்தி செய்யப்படும் அனைத்து ஜவுளிப் பொருட்களுக்கும் பொருந்தும்.
- . கைத்தறி முத்திரை திட்டம் நாடு முழுவதும் அமுல்படுத்தப்படும். இத்திட்டத்தில் தனிநபர் கைத்தறி நெசவாளர்கள், தலைமை மற்றும் பிரதம கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள், கைத்தறி மாஸ்டர் வீவர்கள் (அடைப்புத் தறியாளர்கள்), கைத்தறி மேம்பாட்டு கழகங்கள், கைத்தறி ஜவுளி ஏற்றுமதியாளர்கள், கைத்தறி ஜவுளி சில்லரை வியாபாரிகள் மற்றும் ஒருகிணைந்த கைத்தறி வளர்ச்சி திட்டத்தின் கீழ் அடையாளம் காணப்பட்ட சுய உதவி குழுக்கள் (SHG), Consortia, Producers companies, JLG, HWG etc. அல்லது கைத்தறி வளர்ச்சி ஆணையர் அலுவலகத்தால் ஏதாவது ஒரு திட்டத்தின்கீழ் பயன் பெற அங்கீகரிக்கப்பட்ட அமைப்புகள் உட்பட அனைவரும் பங்கு பெற்று பயனடையலாம்.

**திட்டத்தின் குறிக்கோள்கள்**

- ❖ கைத்தறிப் பொருட்களை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச்சந்தைகளில் பிரபலமாக்குவது.
- ❖ நுகர்வோர்க்கு கைத்தறிப் பொருட்களின் நம்பகத் தன்மையை உறுதிபடுத்துவது.
- ❖ கைத்தறி நெசவாளர்களுக்கு வெளிநாட்டு வர்த்தக சந்தைச் சார்ந்த தொடர்புகளை அதிகரிக்கச் செய்வது.
- ❖ கைத்தறி பொருட்களுக்கான உற்பத்தி மற்றும் வினியோக தொடர்பு நிலைகளை பலப்படுத்துவது.
- ❖ கைத்தறி பொருட்களுக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளில் உரிய விலையை பெற்றுத்தருவது.
- ❖ கைத்தறி நெசவாளர்களுடைய வருமானத்தை அதிகப்படுத்துவது.

- ❖ கைத்தறி நெசவாளர்களுக்கு வருடம் முழுவதும் தொடர்ந்து வேலை வாய்ப்பு கிடைப்பதற்கு ஆவன செய்வது.
- ❖ கைத்தறி நெசவாளர்களின் உற்பத்தி மற்றும் விற்பனை குறித்த தகவல்களை சேகரித்து, அரசின் தற்போதைய இதர கைத்தறி நலத்திட்டங்களின் பயன்களை பெற உதவுவதற்கும், எதிர்கால நலத்திட்டங்களை வகுப்பதற்கும் உபயோகப்படுத்திக்கொள்வது.

**திட்ட அமுலாக்கம்**

இந்த கைத்தறி முத்திரை திட்டத்தை நாடுமுழுவதும் அமுல்படுத்துவதற்கு இந்திய அரசின் ஜவுளி அமைச்சகத்தின் கீழ் இயங்கும் நிறுவனமான **டெக்ஸ்டைல்ஸ் கமிட்டி** நியமிக்கப்பட்டுள்ளது.

**கைத்தறி முத்திரை பெறுவதற்கான வழிமுறைகள்**

- ❖ விண்ணப்ப படிவங்களை டெக்ஸ்டைல்ஸ் கமிட்டி அலுவலகங்களில் இருந்து அல்லது www.textilescommittee.nic.in என்ற இணைய தளத்தில் இருந்து பெற்றுக் கொள்ளலாம்
- ❖ இத்திட்டத்தை தவறாக பயன்படுத்துவதை தடுப்பதற்காக தனிநபர் கைத்தறி நெசவாளர்கள், கைத்தறி மாஸ்டர் வீவர்கள் (அடைப்புத் தறியாளர்கள்), தலைமை மற்றும் பிரதம நெசவாளர்

கூட்டுறவு சங்கங்கள், கைத்தறி மேம்பாட்டு கழகங்கள், கைத்தறி ஜவுளி சில்லரை வியாபாரிகள், கைத்தறி ஜவுளி ஏற்றுமதியாளர்கள் மற்றும் ஒருகிணைந்த கைத்தறி வளர்ச்சி திட்டத்தின் கீழ் அடையாளம் காணப்பட்ட சுய உதவி குழுக்கள் (SHG), Consortia, Producers companies, JLG, HWG etc. அல்லது கைத்தறி வளர்ச்சி ஆணையர் அலுவலகத்தால் ஏதாவது ஒரு திட்டத்தின்கீழ் பயன் பெற அங்கீகரிக்கப்பட்ட அமைப்புகள் ஆகியோரின் விண்ணப்பங்கள் நேர்முக ஆய்விற்குப் பிறகே பதிவு செய்யப்படும்.

❖ தனிநபர் கைத்தறி நெசவாளர்கள், கைத்தறி மாஸ்டர் வீவர்கள் (அடைப்புத் தறியாளர்கள்), தலைமை மற்றும பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள், கைத்தறி மேம்பாட்டு கழகங்கள், கைத்தறிஜவுளி சில்லரை வியாபாரிகள், கைத்தறிஜவுளி ஏற்றுமதியாளர்கள் மற்றும் ஒருகிணைந்த கைத்தறி வளர்ச்சி திட்டத்தின் கீழ் அடையாளம் காணப்பட்ட சுய உதவி குழுக்கள் (SHG), Consortia, Producers companies, JLG, HWG etc. அல்லது கைத்தறி வளர்ச்சி ஆணையர் அலுவலகத்தால் ஏதாவது ஒரு திட்டத்தின்கீழ் பயன் பெற அங்கீகரிக்கப்பட்ட அமைப்புகள் உரிய பதிவு கட்டணத்தை செலுத்தியபின் பதிவு செய்யப்பட்டு, அவர்களுடன் திட்டத்தின் செயல்முறைக்கு ஓர் ஒப்பந்தம் (Agreement) செய்து கொள்ளப்படும்.

❖ கைத்தறிமுத்திரை லேபிள்கள் விண்ணப்பதாரரின் வருடாந்திர உற்பத்தி மற்றும் விற்பனையின் அடிப்படையில் மூன்று மாதத்திற்கு ஒரு முறை வழங்கப்படும்.

❖ கைத்தறிமுத்திரை திட்டத்தில் பதிவு செய்தவர்கள் லேபிள்களின் உபயோக விபரத்தை மாதம் ஒரு முறை டெக்ஸ்டைல்ஸ் கமிட்டி அலுவலகத்திடம் சமர்ப்பிக்க வேண்டும்.

**கைத்தறிமுத்திரை பதிவு கட்டணம்**

| வ. எண். | உபயோகிப்போரின் விபரம் | பதிவு கட்டணம் ஒரு வருடத்திற்கு ரூபாயில் |
|---|---|---|
| 1. | தனிநபர் கைத்தறி நெசவாளர்கள் | 25 |
| 2. | கைத்தறி மாஸ்டர் வீவர்கள் (அடைப்புத் தறியாளர்கள்) | 500 |
| 3. | பிரதம கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவு சங்கம் | 2000 |
| 4. | தலைமை கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவு சங்கம் மற்றும் கைத்தறி மேம்பாட்டு கழகங்கள | 5000 |
| 5. | கைத்தறி ஜவுளி சில்லரை வியாபாரிகள் (உள்ளூர்) | 5000 |
| 6. | கைத்தறி ஜவுளி உற்பத்தி ஏற்றுமதியாளர்கள் (வெளிநாட்டு சந்தை) | 10000 |
| 7. | கைத்தறி ஜவுளி வணிக ஏற்றுமதியாளர்கள் (வெளிநாட்டுச் சந்தை) | 10000 |
| 8. | ஒருகிணைந்த கைத்தறி வளர்ச்சி திட்டத்தின் கீழ் அடையாளம் காணப்பட்ட சுய உதவி குழுக்கள் (SHG), Consortia, Producers companies, JLG, HWG etc. அல்லது கைத்தறி வளர்ச்சி ஆணையர் அலுவலகத்தால் ஏதாவது ஒரு திட்டத்தின்கீழ் பயன் பெற அங்கீகரிக்கப்பட்ட அமைப்புகள். | 500 |

**லேபிளின் விலை** :

கைத்தறி முத்திரை லேபிள்கள், பாலியஸ்டர் ட.்.பேட்டா துணியில் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த லேபிள்கள் ஓக்கோடெக்ஸ்-100 (OEKOTEX-100) என்ற தரச்சான்றிதழ் பெறப்பட்ட உற்பத்தியாளர்களிடமிருந்து கொள்முதல் செய்யப்படுகிறது. இந்த ஓக்கோடெக்ஸ்-100 தரச்சான்றிதழானது வெளிநாட்டு வாடிக்கையாளர்களின் சுற்றுச்சூழல் பாதுகாப்புத் தேவையை பூர்த்தி செய்கிறது. ஒவ்வொரு லேபிளின் விலை ரூ. 0.60 ஆகும். பதிவு செய்யப்பட்ட அனைவருக்கும் அவர்களின் உற்பத்தி மற்றும் விற்பனைதிறன் அடிப்படையில் லேபிள்கள் வழங்கப்படும்.

**அமுலாக்க முறைகள்** :

- குறிப்பிட்ட கால இடைவெளியில் கண்காணிப்பு குழு அதிகாரிகளால் தணிக்கை செய்யப்படும்.
- அவ்வப்போது சந்தையில் இருந்து கைத்தறி முத்திரையுள்ள பொருட்களின் மாதிரிகள் வாங்கப்பட்டு கைத்தறிமுத்திரை திட்டத்தின் செயல்முறைகள் சரிபார்க்கப்படும்.
- இது தவிர, கைத்தறிமுத்திரை திட்டத்தின் கீழ் பதிவு செய்யும் போது டெக்ஸ்டைல்ஸ் கமிட்டியுடன் திட்ட செயல்முறைக்கு செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி, உபயோகிப்பாளர்கள் லேபிளை தவறாக பயன்படுத்தும் பட்சத்தில் அவர்கள் மீது விதிக்கப்படும் அபராதமும் தண்டனையும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.
  - முதலாவதாக, ஆரம்பக்கட்ட ஆய்வில் லேபிளை தவறாக உபயோகிக்கப்படுவது தெரியவந்தால் உடனடியாக பதிவு ரத்து செய்யப்படும். மேலும், உபயோகிப்படாத லேபிள்கள் பறிமுதல் செய்யப்பட்டு மேற்கொண்டு லேபிள்கள் வழங்குவது நிறுத்தப்படும்.
  - இரண்டாவதாக, சம்பந்தப்பட்ட நபர்களுக்கு அல்லது நிறுவனத்திற்கு வணிக முத்திரைச் சட்டம் 1999 (Trade Mark Act 1999) அத்தியாயம் XII ன் படி குறைந்தபட்சமாக **6** மாதத்திலிருந்து அதிகபட்சமாக **3** வருடம் வரை சிறைத்தண்டனையும் மற்றும் அபராதத் தொகையாக ரூ. **50,000** முதல் **2,00,000** வரை விதிக்கப்படும். இந்த தவறு மேலும் தொடரும் பட்சத்தில் தண்டனையும், அபராதமும் அதிகரிக்கப்படும்.

**நுகர்வோர்களின் கவனத்திற்கு**

கைத்தறி முத்திரையுள்ள பொருட்களின் நம்பகத் தன்மை மீது நுகர்வோர்க்கு ஏதேனும் சந்தேகம் ஏற்பட்டால் உரிய ரசீது மற்றும் குறியீடு எண்ணுடன் டெக்ஸ்டைல்ஸ் கமிட்டி அலுவலகத்திடம் தொடர்பு கொள்ளவும். இது குறித்து ஆய்வு செய்த பின் கிடைத்த விபரங்களைக் கொண்டு டெக்ஸ்டைல்ஸ் கமிட்டி வணிக முத்திரை சட்டம் 1999 (Trade Mark Act 1999) அத்தியாயம் XIIன் படி (Chapter XII) பதிவு செய்த உபயோகிப்பாளர் மீது உரியநடவடிக்கை எடுக்கும். பிறகு, அந்த நடவடிக்கைபற்றிய விபரங்களை பல்வேறு விளம்பரச்சாதனங்கள் மூலம் அதிக அளவில் விளம்பரபடுத்தப்படும். மேலும், நுகர்வோர் விரும்பினால் நுகர்வோர் நீதி மன்றத்திலும் முறையிடலாம்.

★ ★ ★ ★ ★

## அமுல்படுத்தும் அலுவலகம் - "டெக்ஸ்டைல்ஸ் கமிட்டி" பற்றிய குறிப்பு

டெக்ஸ்டைல்ஸ் கமிட்டி, இந்திய நாடாளுமன்றச் சட்டத்தின் மூலம் 1963-ல் உருவாக்கப்பட்ட சட்ட பூர்வமான அரசு அமைப்பு ஆகும். இதன் அடிப்படை நோக்கம் இந்தியஜவுளித் தொழிலின் முன்னேற்றத்திற்கும் அதன் தர மேம்பாட்டிற்கும் ஆவண செய்வதாகும். இதில், தற்போது 600 பேர் பணியாற்றுகிறார்கள். அவர்களில் 400 பேர் தொழில்நுட்ப வல்லுநர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இது நம் நாட்டில் 30 அலுவலகங்கள் மூலம் ஜவுளித்துறையின் வளர்ச்சிக்கு சிறந்த சேவையாற்றி வருகிறது. இதன் அலுவலகங்கள் முகவரியுடன் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**TEXTILES COMMITTEE**
P. Balu Road, Prabhadevi Chowk,
Prabhadevi, **Mumbai - 400 025.**
Tel:91-22-66527507,66527500 (Board) Fax:91-22-66527509
email: secy@giasbm01.vsnl.net.in

**Southern Zonal Office :**
**TEXTILES COMMITTEE**
North Wing, 1 st Floor,
TNSC Board Complex,
212, R.K. Mutt Road, Mylapore,
**Chennai - 600 004.** (T.N.)
Tel/Fax: 91-44-24610887/5901/24640240
email: rotcchennai@gmail.com

**Northern Zonal Office :**
**TEXTILES COMMITTEE**
41 Community Centre, Phase I
Naraina Industrial Area,
**New Delhi - 110 028.**
Tel: 91-11-65496570/25791380
Fax: 91-11-25896150/3241
email:-tcnarain@vsnl.net

### Regional Offices :

**Textiles Committee**
"Ankur" Opp. Deenabai Tower,
Mirzapur Road, Lal Darwaza,
**Ahmedabad - 380 001** (Gujarat)
Tel: 91-79-2550 7612
Fax: 91-79-2550 7633
email: tcabd@vsnl.net

**Textiles Committee**
FKCCI, WTC Building, 1st Floor,
Kempe Gowda Road,
**Bangalore-560 009** (Karnataka)
Tel: 91-80-22261401/22208010
Fax. 91-80-22261401
email: tcblr@dataone.net

**Textiles Committee**
Bellary Dist. Cotton Textiles &
Clothing Ind. Development Trust
Site No.67, APMC Yard,
**Bellary - 583 101**
Tel: 08392 250794
email: tcbellary@sify.com

**Textiles Committee**
C/o Orissa State Handloom Development
Corpn. Ltd., Hastanta Bhavan, Janpath,
Unit - IX, **Bhuvaneswar-751 022** (Orissa)
Telefax: 91-674-2543723
email: tcbbsr@sify.com

**Textiles Committee**
Raj Chambers, 978-A,Thadagam Road,
**Coimbatore - 641 002.** (T.N.)
Tel: 91-422-2473094, 2478758
Fax: 91-422-2472689
email: tccbe@dataone.net

**Textiles Committee**
3/108, M.G. Road, (Main Road)
**Ekambarakuppam - 517 592**
**Nagari Mandalam,** Chittor District (A.P.)
Telefax: 91-8577-234619
email: texcommnri@sify.com

**Textiles Committee**
Sai Ram Complex, Door No.25-1-9
Near Mastan Darga, G.T.Road
**Guntur** - 522 004 (AP)
Tel: 91-863-221 8951 Fax: 91-863-235 9659
email: tcguntur@sify.com

**Textiles Committee**
Quality Control Office Bldg., 2nd Floor,
Industrial Estate, Bamunimaidan,
**Guwahati - 781 021** (Assam)
Tel: 91-361-2653020
email: tcguwahati@sify.com

**Textiles Committee**
1st Floor, UNI Building, D.No.10-1-1200
A.C. Guards, Masab Tank Road,
**Hyderabad - 500 004** (A.P.)
Telefax: 91-40-2332 7153
email: rotchyd@yahoo.co.in

**Textiles Committee**
Hall No.1, Ward No.1 0, Rajaram
Stadium,
Near Shivaji Putala,
**Ichalkaranji - 416 115.** (Maharashtra)
Tel. 91-230-242 0838
email: tcich@sancharnet.in

**Textiles Committee**
C-1, F-Type, Indira Complex, Vikas
Tower, Navlakha, **Indore - 452 001.**
(M.P)
Tel: 91-731-240 1243
email:-tcindore@vsnl.net

**Textiles Committee**
N/S/O/2, Nehru Place, Tank Road,
**Jaipur - 302 015** (Rajasthan)
Tel: 91-141-274 3453,5105234
Fax: 91-141-2403020
email:-tcjaipur@gmail.com

**Textiles Committee**
Platinum Centre, 2nd Fir, Bank Road,
**Kannur - 670 001.** (Kerala)
Telefax: 91-497-2706390
email:-cnn_tckannur@dataone.in

**Textiles Committee**
117/O/51, Sharada Nagar
(Kakadeo) Near Syndicate Bank
**Kanpur - 208 025** (U.P.)
Tel: 91-512-2582458,2581464
Fax: 91-512-258 2458
email:-tckanpur@dataone.in

**Textiles Committee**
K V R Complex, 2nd Floor, 21- J,
80 Feet Road, **Karur - 639 002.** (T.N.)
Tel: 91-4324-238610
Fax: 91-4324-274871
email: kru_tckarur@dataone.in

**Textiles Committee**
Block - GN, Plot - 38/3, Sector - V,
Salt Lake City, **Kolkata - 700091.** (W.B.)
Tel: 91-33-23571008,23575155
Fax: 91-33-26575202
email: tccal2@vsnl.net

**Textiles Committee**
48B Tagore Nagar, Civil Lines,
**Ludhiana - 141 001** (Punjab)
Tel: 91-161-2305635
Fax: 91-161-2304906
email: tcludhiana@satyam.net.in

**Textiles Committee**
II-B, Jawahar Road, Near Vadamalayan Hospital
Chokkikulam, **Madurai - 625 002.** (T.N.)
Telefax: 91-452-2535748/58
email:-tcmadurai@satyam.net.in

**Textiles Committee**
Brindavan, 1st floor, 744, WHC Road,
Dharamapet, **Nagpur - 440 010.** (Maharashtra)
Telefax: 91-712-256 1564
email:-tcnagpur_ngp@sancharnet.in

**Textiles Committee**
39 Community Centre, East of Kailash
**New Delhi - 110065.**
Telefax: 91-11-2648 3476
email:-tcdek@vsnl.net.in

**Textiles Committee**
SCF 32, 1st Floor,
Sector-II, HUDA
**Panipat - 132 103.** (Haryana)
Tel: 91-180-265 8324
email:-tcpanipat@gmail.com

**Textiles Committee**
S.K.Complex, 2nd Floor,
54/598 Trichy Main Road,
Gugai, **Salem - 636 006** (T.N.)
Tel: 91- 427 - 2467740
email: tcsalem@dataone.in

**Textiles Committee**
162/11, Railway Lines,
**Sholapur - 413 001.** (Maharashtra)
Tel: 91-217-2312698
email: textcro_spr@dataone.in

**Textiles Committee**
Block No.2(A), 2nd Floor,Resham Bhawan,
Lal Darwaza, **Surat - 395 003**.(Gujarat)
Tel: 91-261-2423167
email: tcsurat@yahoo.com

**Textiles Committee**
384 B.S. Sundaram Road,
D.L.M. Gin & Pressing Factory,
**Tirupur - 641 601.** (T. N.)
Tel: 91-421-2201402/2237935
Fax: 91-421-2202500
email:-tctirupur@dataone.in

**Textiles Committee**
EUPEA, B-2,Gurukripa Colony,
Nadesar, **Varanasi - 221 002.** (U.P.)
Tel: 91-542-2500616,2500413
email:tcvns@sify.com